இந்திய உயர் ஸ்தானிகராலயம்

கொழும்பு

************

<u>ஊடக அறிக்கை</u>

**2020 பெப்ரவரியில் பொறியியல்துறை பட்டதாரி உளச்சார்பு பரீட்சை (GATE) விண்ணப்பிப்பதற்கான இறுதி திகதி 24 செப்டெம்பர் 2019**

**********************************************************

டில்லியில் உள்ள இந்திய தொழில்நுட்ப நிறுவனம் (IIT) இந்த வருடம் பொறியியல்துறை பட்டதாரி உளச்சார்பு பரீட்சையினை (GATE) இந்திய அரசின் மனிதவள அபிவிருத்தி அமைச்சின் சார்பாக நடத்துகிறது. IITs/IISc/NIT மற்றும் ஏனைய முன்னணி இந்திய பல்கலை கழகங்களில் பொறியியல் மற்றும் விஞ்ஞான துறைகளில் பட்டப்பின் படிப்புக்களை தொடரவிரும்புபவர்கள் GATE தேர்வில் தேர்ச்சிபெறவேண்டிய கட்டாயம் உள்ளது. இந்தியாவிலும் கொழும்பு உள்ளிட்ட வெளிநாட்டு மையங்களிலும் 700க்கும் அதிகமான நிலையங்களில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான பரீட்சார்திகள் இவ்வருடம் இந்த பரீட்சையில் தோற்றுகின்றனர். 2020 ஜூன் – ஜூலையில் ஆரம்பமாகும் அடுத்த கல்வி ஆண்டுக்கான அனுமதிக்காக இந்த பரீட்சைகள் 2020 பெப்ரவரியில் 1,2,8,9 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது. விருப்பமுள்ள பரீட்சார்திகள் 2019 செப்டெம்பர் 24 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ இணையத்தளம் மூலமாக விண்ணப்பிக்க முடியும். மேலதிக தகவல்களுக்கு பரீட்சார்திகள் http://gate.iitd.ac.in and http://iccr.gov.in ஆகிய இணைய தளங்களை பார்வையிட முடியும்.

***************

கொழும்பு
09 செப்டெம்பர் 2019